TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213074

1. District மாவட்டம் : Tenkasi
   PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption
   Year: ஆண்டு 2024
   FIR No.: மு.த.அ. எண் 05/2024
   Date நாள் 22.03.2024

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended in Act 16 of 2018.
   Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்:
   Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:
   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் 21.03.2024 14.30 hrs
   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.03.2024
   Time நேரம் 12.15 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.03.2024
   Time நேரம் 12.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
   Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Sernthamangalam. 25 Km North East
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr.B.MATHAN
   (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் Tr.Balamurugan@ Maharaja
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 11.05.1998
   (d) Nationality : நாட்டினம் INDIAN
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் FARMER
   (g) Address : முகவரி 8/23 East Street, Kadambankulam, Tenkasi District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Madasamy, Village Administrative Officer, Sernthamangalam Village, Kadayanallur Taluk, Tenkasi District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 22.03.2024-ம் தேதி பகல் 12.15 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் C.ஜெயஸ்ரீ ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது கடையநல்லூர் தாலுகா கடம்பன்குளம் கதவு எண்.8/23, கீழத் தெருவில் குடியிருந்து வரும் திரு.பாலமுருகன் என்ற மகாராஜா மகன் திரு.மதன் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, ரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட சேர்ந்தமங்கலம் கிராம நிர்வாக அலுவலர் திரு.மாடசாமி பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்து, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 22.03.2024-ம் தேதி மதியம் 13.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2024 u/s 7 of the PC Act 1988 as Amended in Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு:
அனுப்புநர் B.மதன், வயது 26/24, த/பெ பாலமுருகன் என்ற மகாராஜா, 8/23 கீழத் தெரு,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

பா.மதன் 22.3.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் C. JAYASREE
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் ..........

கடம்பன்குளம், கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம். பெறுனர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தென்காசி. அய்யா, நான் கடையநல்லூர் தாலுகா கடம்பன்குளத்தில் எனது தாயாருடன் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது கேரளாவில் டீ கடையில் வேலை பார்த்து வருகிறேன். விவசாயமும் செய்து வருகிறேன். எனது தந்தை பெயரிலும், எனது பாட்டி சுப்பம்மாள், தாத்தா சண்முகத்தேவர் பெயரிலும் சேர்ந்தமங்கலம் கிராம சர்வே எண். 563, 581, 647, 597, 658, 1090, 118, 120, 629-ல் மொத்தம் 6¼ ஏக்கர் நிலம் இருந்தது. எனது தந்தை மற்றும் தாத்தா இறந்து விட்டதால் எனது பாட்டி திருமதி.சுப்பம்மாள், அம்மா திருமதி.செல்வி, அத்தை திருமதி.பாப்பம்மாள் மற்றும் எனது இரண்டு தங்கைகளும் சேர்ந்து வீரசிகாமணி சார்பதிவக விடுதலை ஆவணம் 2994/2023, 2996/2023, 18/2024 மூலம் எனக்கு விடுதலை எழுதி கொடுத்தார்கள். மேற்படி ஆவணங்கள் பதியும்போதே பட்டா மாறுதலுக்கு வருவாய் துறைக்கு ஆன்லைனில் விண்ணப்பம் சென்றது. அதன்படி எனக்கு பட்டா எண். 10945, 4976, 4977, 4421, 4473 ஆகிய பட்டா எண் கொடுத்து ஒரு சில சர்வே எண்களில் உள்ள இடத்திற்கு மட்டும் கூட்டுப்பட்டா வந்தது. நான் விடுப்பட்ட சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களுக்கு பட்டா மாறுதல் கேட்டு ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தேன். ஆனால் சேர்ந்தமங்கலம் VAO ஆவணங்கள் சமர்பிக்கவில்லை என தள்ளுபடி செய்தார். எனவே ஒரு நாள் VAO-வை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது ஆவணங்கள் தெளிவாக இல்லை என்றும், மீண்டும் விண்ணப்பித்துவிட்டு ஆவணங்களை கொண்டு வந்து கொடுக்கச்சொன்னார். பின்பு 06.03.2024-ம் தேதி 3 ஆவணங்களின் படி உள்ள சொத்துக்களுக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி மூன்று விண்ணப்பங்கள் இ சேவை மூலம் ஆன்லைனில் பண்ணினேன். பின்பு ஒருவாரம் கழித்து சேர்ந்தமங்கலம் VAO அலுவலகம் சென்று VAOவிடம் ஆவணங்கள் கொடுத்துவிட்டு வந்தேன். பின்பு நான் கடந்த 18.03.2024-ம் தேதி சேர்ந்தமங்கலம் VAO அலுவலகம் சென்று VAO திரு.மாடசாமி அவர்களை பார்த்து எனது பட்டா மாறுதல் குறித்து கேட்டபோது ஒரு சொத்துக்குரிய பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்து விட்டதாகவும், மீதம் உள்ள இரண்டு சொத்துக்களுக்கு பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்ய தனக்கு 10,000/- தந்தால்தான் பரிந்துரை செய்து அனுப்புவேன் என்று சொன்னார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். நேற்று 21.03.2024-ம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் சேர்ந்தமங்கலம் VAO அலுவலகம் சென்றபோது VAO திரு.மாடசாமி அவர்கள் இல்லாததால் அங்கிருந்த தலையாரி அம்மாவிடம் VAO எப்போது வருவார்கள் என்று கேட்டேன் அப்போது அவர்கள் VAO க்கு போண் பண்ணி கேட்க சொன்னார்கள் நான் எனது செல்போன் எண் 9025683439லிருந்து VAO திரு.மாடசாமி செல்போன் எண்.9500687769க்கு தொடர்பு கொண்டபோது அவர் தான் கடையாலுருட்டியில் நிற்பதாகவும், அங்கு வந்து பார்க்க சொன்னார். நான் அங்கிருந்து கடையாலுருட்டி சென்று

மெயின்ரோட்டில் வைத்து சுமார் 02.30 மணியளவில் பார்த்தபோது அவர் ரூ.10,000/- கொண்டு வந்துருக்கீறீர்களா என்று கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு VAO திரு.மாடசாமி அவர்கள் ரூ.10,000/- தந்தால்தான் பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்வேன் என்று சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தபொழுது பட்டா மாறுதலுக்கு லஞ்சமாக ரூபாய் 10,000/- பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே, என்னிடம் பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சமாக ரூ.10,000/- கேட்ட சேர்ந்தமங்கலம் VAO திரு.மாடசாமி மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஓம்.பா.மதன்) 22.3.24.

Sir, Received the complaint on 22.03.2024 at 13.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.05/2024 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 22.03.2024 at 13.00 hrs. sd.C.Jayasree, Inspector of Police, V&AC, Tenkasi. 22.03.2024.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

C. JAYASREE
INSPECTOR OF POLICE
V&AC Tenkasi
22/3/24